கருத்துக்களைப் பேசி இருக்கிறேன். அப்போது பணக்காரர்கள் மட்டும்தான் நகராட்சித் தலைவர்களாக வர முடியும், ஏழைகளாக இருந்தால் வரமுடியாது, காரணம் நகராட்சிகளின் உறுப்பினர்கள் ஊர் கடத்தப்பட்டு வெள்ளைத்தாளில் கையெழுத்து வாங்கி ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் எழுதிக் கொடுத்ததைப் படியுங்கள் அப்படியே.

திரு.கே.பண்ணை சேதுராம்: டிஸ்ட்ரிக்ட் முனிசிப்பாலிட்டீஸ் ஆக்டில், நேரடியாக தலைவர்களைத்தேர்ந்தெடுக்கிற முறையை ஆதரித்துப் பேசினேன். ஆனால் மெயில் பத்திரிகையில் நான் பேசிய பேச்சைப் போடுவதற்குப் பதிலாக நான் இங்கே பஞ்சாயத்து தலைவர்களைத் தேர்ந்தெடுக்கிற முறைப்பற்றி பேசியதாக போடப்பட்டிருக்கிறது. மெயில் பத்திரிகை ஒரு சிறந்த இடத்தைப் பெற்றிருக்கிறது. படித்தவர்கள் மத்தியில் அந்தப் பத்திரிகை ஒரு நல்ல இடத்தைப் பெற்றிருக்கிறது. ஆகவே படித்தவர்கள் நான் பேசாத கருத்துக்களைப் பேசியதாக படித்து என் மீது தவறுதலான ஒரு அபிப்பிராயத்தை உண்டுபண்ணுகிற அளவில் இருக்கிற காரணத்தால் இது அவை உரிமை மீறல் செயலாகும். எனவே இதை உரிமைக்குழுவிற்கு அனுப்பி வைக்க தீர்ப்பு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இது குறித்தும் என் தீர்ப்பை பின்னர் வழங்குகிறேன்.

(உ) ஓர் உறுப்பினர் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டை மட்டும் 'தினகரன்' நாளேட்டில் வெளியிட்டு விட்டு அதற்கு அளிக்கப்பட்ட மறுப்பை வெளியிடாதது குறித்து.

திரு. வி. கொ. சின்னசாமி: தலைவர் அவர்களே, 31-3-78ம் தேதி அன்று வெளியிடப்பட்ட தினகரன் பத்திரிகை என்மீது களங்கம் ஏற்படும் வகையிலும், பொதுமக்கள் மத்தியில் கெட்ட பெயர் உண்டாக்கும் நோக்கத்துடன் வேண்டுமென்றே உண்மைக்கு புறம்பான செய்தியை வெளியிட்டுள்ளது. திரு. ஜேம்ஸ் அவர்கள் 30-3-78 அன்று பேரவையில் பேசும்போது என்னைப்பற்றிக் கூறிய குற்றச்சாட்டுக்கு நான் மறுத்துக்கூறிய தன்னிலை விளக்கத்தையோ அல்லது பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் நிதி அமைச்சர் அவர்களும் குறுக்கிட்டுச் சொன்ன பதிலையோ பிரசுரிக்காது என்மீது சொன்ன குற்றச்சாட்டை மட்டும் வெளியிட்டது தவறாகும். என்மீது களங்கம் சுமத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகும். திரு. ஜேம்ஸ் அவர்கள் குற்றம்சாட்டினார், எம். எல். ஏ. அதை மறுக்காது தூங்கிக்கொண்டிருந்தார்கள் என்று அந்தப் பகுதி மக்கள் நினைக்கிற ஒரு நிலைமை வந்துவிடக்கூடாது.

1978 ஏப்ரல் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது உரிமை மீறல் பற்றிய பிரச்னை. நீங்கள் கொடுத்துள்ளதுபற்றிச் சொல்லுங்கள்.

திரு. வி. கொ. சின்னசாமி; இது இந்த அவையின் உரிமையையும் என்னுடைய உரிமையையும் பாதிக்கக்கூடிய உரிமை மீறலாகும். எனவே, இதை உரிமை குழுவிற்கு தலைவர் அவர்கள் அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றும் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது உரிமை மீறல் பற்றிய பிரச்னை. இன்னொன்றும் கேட்க விரும்புகிறேன் என்றால் எப்படி? உட்காருங்கள், இதற்கும் தீர்ப்பு பின்னல் அறிவிக்கிறேன்.

(4) ஒத்திவைப்புத் தீர்மானம்

சென்னை எண்ணூர் அனல் மின் நிலையத்தில் போதிய நிலக்கரி இருப்பு இல்லாததால் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை எண்ணூர் அனல் மின் நிலையத்தில் தேவையான நிலக்கரி இருப்பு வைக்கப்பட இயலாத காரணத்தால் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டு தமிழகமே இருளால் மூழ்கி அபாயமான சூழ்நிலை ஏற்பட்டு இருப்பதைப்பற்றி விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள், இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, சென்னை எண்ணூர் அனல் மின் நிலையத்தில் தேவையான நிலக்கரி இருப்பு வைக்கப்பட இயலாத காரணத்தால் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டு தமிழகமே இருளால் மூழ்கி அபாயமான சூழ்நிலை ஏற்பட்டு இருப்பதைப் பற்றி விவாதிக்க பேரவையின் இன்றைய அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எண்ணூர் அனல் மின் நிலையம் என்பது நம் மாநிலத்திலே மின்சாரத்தைப் பொறுத்த வரையில் முக்கியமான பங்கினை வகித்து வருகிறது. சென்னை நகர மக்களின் மின்சார தேவைகளை குறிப்பாக தொழிற்சாலைகளின் மின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், பீக் லோட் ப்ராப்ளம்ஸ் ஏற்படுகிறபோது சமாளிக்கவும் எண்ணூர் மின் நிலையம் உதவியாக இருக்கிறது. பல கோடி ரூபாய் செலவில் இந்த மின் நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்புகூட 'ஆப்பரேஷன் எண்ணூர்' என்ற திட்டத்தின் அடிப்படையில் பி. எச். இ. எல். ஒத்துழைப்புடன்